**செய்தி வெளியீடு எண்: 481** **நாள்: 24.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (24.7.2018) காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையத்தின் 20–வது ஆட்சி மன்றக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், வண்டலூர் – அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி – சிறுவர் பூங்கா, வேலூர் – அமிர்தி பூங்கா, சேலம் – குரும்பப்பட்டி பூங்கா ஆகிய உயிரியல் பூங்காவிற்கு 2018–19–ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளுக்காக மொத்தம் 20 கோடியே 31 லட்சம் ரூபாய் நிதி அனுமதிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இந்த ஆண்டு 10,000 மரக்கன்றுகள் நட உத்தரவிட்டார்கள்.

மேலும், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 50 லட்சம் ரூபாய் செலவில் இரண்டு குளிரூட்டப்பட்ட உலாவிட வாகனங்கள், வெளிநாடுகளிலிருந்து விலங்குகள் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு இறக்குமதி செய்ய 2 கோடி ரூபாய் நிதி, கிண்டி சிறுவர் பூங்காவில் வன உயிரினங்களின் நலனுக்காக 45 லட்சம் ரூபாய் செலவில் ஆரம்ப நிலை விலங்கு மருத்துவமனை, பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக சேலம் குரும்பப்பட்டி பூங்காவிற்கு 7 லட்சம் ரூபாய் செலவில் ஒரு மின்கல ஊர்தி ஆகிய பணிகளுக்காக நிதி அனுமதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு.வி. பழனிகுமார், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) திரு.ஆர்.கே. உபாத்யாய், இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (தலைமை வனஉயிரின காப்பாளர்) திரு.டிபி. ரகுநாத், இ.வ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசந்திரன், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநர் திரு.சி. யுவராஜ், இ.வ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.7.2018**